மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

86—

மாணவர் விடுதி

***2100 திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, பழவூரில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்மா, தினம், தினம் வழங்கும் 110 ஆல், எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் போட்டது 111; வாக்களித்த மக்கள் கையில் வைக்கப்பட்ட மை காய்வதற்குள் தமிழனின் தலையெழுத்தை மாற்றிட வந்த மை, அம்மாவின் பேனா மை என்பதைத் தெரிவித்து, தெய்வத் திருமகள் எங்கள் அம்மா அவர்களின் திருவடி வணங்கி, என்னுடைய திருத்திய பதிலை அளிக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 72 விடுதிகள் இயங்கி வருகின்றன. அதில், குறிப்பாக, ராதாபுரம் தொகுதியில் 3 பள்ளி மாணவர் விடுதிகளும், 5 மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன. எனவே, தற்போதைய சூழ்நிலையில், ராதாபுரம் தொகுதி, பழவூரில் மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

2016 ஆகஸ்ட் 18]

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிரோடு மெய் சேர்ந்து, அது ஆயுதத்தோடு அணி சேர்ந்தால், அது தமிழ் ஆகும். எங்கள் உயிர் நீங்கள், தமிழ் நிலத்தின் மெய் நீங்கள், உலகிலுள்ள தமிழர்களெல்லாம் உங்கள் கையில் ஆயுதங்கள்; எனவே, தமிழே நீங்கள்தான் அம்மா என்று மாண்புமிகு அம்மா அவர்களை உலகத் தமிழினம் போற்றிப் பாராட்டிக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பிலே, எனது தொகுதிக்குட்பட்ட பழவூரில் ஓர் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி அமைக்கப்படுமா என்ற கேள்வியை நான் கேட்டேன். உண்மையிலேயே இந்த அரசுதான் ஆதி திராவிடர் நல அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறைக்கு ஆதி திராவிடர் நலத் துறை என்று பெயர் வைத்திருக்கிறார்கள். எப்படியென்றால், இங்கே அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: நல அரசாகத் திகழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில்தான், முக்கியத் துறையின் அமைச்சர்களாக மூன்று அமைச்சர்களை நியமித்திருக்கிறார்கள். இதற்காக ஆதி திராவிடர் சமுதாயம் மாண்புமிகு அம்மா அவர்களைப் போற்றிப் பாராட்டுகிறது. முக்கிய துறையை வகித்துக் கொண்டிருக்கும் அந்த அமைச்சர்களெல்லாம் முன் வரிசையில் அமர்ந்திருக்கின்றார்கள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும், இங்கே படத்திலுள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்கள், புன்னகையோடு மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மக்கள் நல அரசு மட்டுமல்ல, ஆதி திராவிடர்கள் நலனைக் காக்கின்ற அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், என்னுடைய கோரிக்கையை, கனிவோடு மீண்டும் பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் 1,314 ஆதி திராவிடர் நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அதில், திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 72 விடுதிகள் செயல்பட்டு

வருகின்றன. அதிலும் குறிப்பாக, ராதாபுரம் தொகுதியில் 8 விடுதிகள் இயங்கி வருகின்றன. இருப்பினும், தேவையின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள பழவூரில் மாணவர்களுடைய எண்ணிக்கை, இட வசதி, நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, துறை அலுவலர்களால் ஆய்வு மேற்கொண்டு, பெறப்படும் ஆய்வறிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை நிறைவேற்ற வழிவகை செய்யப்படும் என்பதை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு :** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

முற்பகல் 10-35

2. 17-8-2016 அன்று முதல் ஒரு வார காலத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்ததை மறுபரிசீலனை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்ன சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் நடந்த நிகழ்ச்சி எங்களுக்கெல்லாம் வருத்தமளிக்கிறது. இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்; அதேபோன்று, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அதிகமான எண்ணிக்கையிலே இருக்கக்கூடிய எதிர்க்கட்சி உறுப்பினர்களை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சபையிலிருந்து வெளியேற்றியிருக்கிறார்கள். அவர்களை நீங்கள் மீண்டும் அழைக்க வேண்டும் என்ற கோரிக்கையை உங்களிடம் வைக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.*